UNIVERSITY OF PERADENIYA

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) – DECEMBER 2017

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - දෙසැම්බර් 2017

ISLAMIC CULTURE I/ ඉස්ලාම් සංස්කෘතික I - ( ICG I)

**(The Political History of Islam)**

இவ்வினாத்தாளில் மொத்தம் **08** வினாக்கள் உள்ளன. எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

1. ''கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் முன்மாதிரியான ஆட்சியொன்றைத் தோற்றுவித்தார்'' ஆராய்க.

2. முஸ்லிம் ஸ்பெய்னின் தோற்றப் பின்னணியைக் குறிப்பிட்டு, அவ்வாட்சியில் கல்வி, பொருளாதாரம், சமூகவியல் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக் காட்டுக.

3. சிலுவை யுத்தத்திற்கான பின்னணியைக் குறிப்பிட்டு, சுல்தான் ஸலாஹுத்தீன் ஐயூபியின் பலஸ்தீன் வெற்றி பற்றி விரிவாக ஆராய்க.

4. உமையா நிருவாகத்துடன் தொடர்புபடுத்திப் பின்வருவனவற்றை விபரிக்க.
   1. திணைக்களங்கள்
   2. பொதுத்துறை நிருவாகம்
   3. நீதி நிருவாகம்
   4. வருமானங்களும் செலவீனங்களும்

5. அப்பாஸிய கிலாபத்தின் தோற்றம் பற்றி விளக்கி, கலீபா ஹாருன் அர் – ரஷீத் அவர்களது பணிகளை மதிப்பிடுக.

**அல்லது**

கலீபா மஃமூன் அவர்கள் அறிவியல் துறைக்கு ஆற்றிய பங்களிப்பை விபரிக்க.

6. உமையா ஆட்சி வீழ்ச்சியுற்றமைக்கான காரணிகளை விளக்குக.

7. கலீபா அப்துல் மலிக் எதிர்கொண்ட சவால்களையும் அவற்றை அவர் வெற்றி கொண்ட முறையையும் எடுத்துக் காட்டுக.

8. சிறு குறிப்பு எழுதுக.
   1. முவஹ்ஹிதூன்கள் சிற்றரசு.
   2. இந்தியாவில் இஸ்லாத்தின் அறிமுகம்.
   3. கிலாபத் - முல்கியத்.
   4. தாருல் ஹிக்மா.

********

# UNIVERSITY OF PERADENIYA
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
## GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2017
ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - දෙසැම්බර් 2017
## ISLAMIC CULTURE II/ ඉස්ලාම් සංස්කෘතික II - ( ICG II)
**(Fundamentals of Faiths and Sectional Development)**

இவ்வினாத்தாளில் மொத்தம் **08** வினாக்கள் உள்ளன. எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

நேரம்: மூன்று (03) மணித்தியாலம்

---

1) மு.ஃ.தஸிலாக்களின் பிரதான கோட்பாடுகளையும் அவர்களின் ''அல்-குர்ஆன் படைக்கப்பட்டது'' என்ற கருத்தையும் விமர்சன ரீதியாக ஆராய்க.

2) நபியவர்கள், ரிஸாலத்தின் வழிகாட்டல்களை மையப்படுத்தி மதீனா சமூகத்தை எவ்வாறு கட்டியெழுப்பினார் என்பதைப் பரிசீலிக்குக.

3) இமாம் அப்துல் காதிர் ஜீலானி (றஹ்) பற்றிப் பின்வரும் தலைப்புக்களில் எழுதுக.
   1. இமாமவர்கள் வாழ்ந்த சமூக சூழல்.
   2. இமாமவர்கள் காண விளைந்த சமூக மாற்றம்

4) விளக்கக் குறிப்பு எழுதுக.
   1. இறுதி நபித்துவம்.
   2. ரஸாஇலு இஹ்வானுஸ் ஸபா.
   3. ரஜஇய்யத் கோட்பாடு.
   4. முர்ஜிஆக்கள்.

5) ஸகாத் பற்றிப் பின்வரும் தலைப்பில் எழுதுக.
   1. ஸகாத்தின் முக்கியத்துவம்.
   2. ஸகாத்தின் சமூகப் பயன்பாடு.

6) மரணத்தின் பின்னரான மனித வாழ்வின் சாத்தியப்பாடு பற்றிய இஸ்லாமியக் கோட்பாட்டைத் தர்க்க ரீதியாக ஆராய்க.

7) முஸ்லிம்களிடையே சிந்தனா ரீதியிலான பிளவுகள் ஏற்பட வழிவகுத்த காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அவர்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக.

8) ''இபாதத்துக்களின் இலக்குகளுள் பாவமன்னிப்பும் ஒன்றாகும்'' ஆதாரங்களுடன் நிறுவுக.

*******

# UNIVERSITY OF PERADENIYA

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2017

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - දෙසැම්බර් 2017

ISLAMIC CULTURE III/ ඉස්ලාම් සංස්කෘතික III - ( ICG III)

**(Muslim Sciences and Fine Arts)**

இவ்வினாத்தாளில் மொத்தம் **08** வினாக்கள் உள்ளன. எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

1) மத்திய காலப்பகுதியில் முஸ்லிம்கள் விஞ்ஞானத் துறையில் ஆர்வங்கொள்ள அல்குர்ஆன் எவ்வாறு தூண்டுகோளாய் அமைந்தது என்பதை ஆராய்க.

2) வானவியல் தொடர்பான அல்குர்ஆன் வசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அத்துறையின் வளர்ச்சியில் பங்கு கொண்ட இரு வானியலாளர்கள் பற்றி மதிப்பிடுக.

3) மனித இயல்போடும் இயற்கையின் ஒழுங்கமைப்போடும் இணைந்து செல்லும் இசை பற்றிப் பொதுவாகக் குறிப்பிட்டு, அது பற்றிய இஸ்லாமிய நிலைப்பாட்டை விபரிக்குக.

4) முஸ்லிம் கணிதவியலாளரகள் என நீர் கருதும் மிக முக்கியமான இருவரின் பணிகள் பற்றி மதிப்பிடுக.

5) மருத்துவத் துறையின் வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பை விரிவாக ஆராய்க.

6) பின்வருவனவற்றுக்கு விளக்கக் குறிப்பு எழுதுக.
   1. கலீபா அல் மஃமூன்.
   2. கல்வியும் இஸ்லாமும்.
   3. கிரேக்க தத்துவத்தின் பலவீனம்.
   4. அப்பாஸியக் கால இஸ்லாமிய நகரங்கள்.

7) வரலாற்றுக் கலைக்கான முஸ்லிம்களின் பங்களிப்பு எத்தகையது? விபரிக்குக.

8) முஸ்லிம் உலகின் கட்டிடக் கலையில் பள்ளிவாசலின் அமைப்பு முறைகளை விளக்குக.

************